


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

டி.இ.எல்.சி மேக்டலின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி
புரசைவாக்கம், சென்னை – 600 007.

பகுதி – IV

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

2. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

3. **ஆற்றுப்படுத்துதல்** என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

4. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

5. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

6. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

7. **'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்'** என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. **அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட...** இவ்வுரையைத் தொடர்க!

8. இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

9. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

10. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

11. வாழ்த்து மடல் (நண்பனுக்குக் கடிதம்)

மாநில அளவில் நடைபெற்ற **"மரம் இயற்கையின் வரம்"** எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

12. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (முறையீட்டுக் கடிதம்)

13. புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தங்கைக்கு அறிவுரைகளைக் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

14. மருந்தகம் ஒன்றில் நீங்கள் வாங்கிய மருந்து நாள்கடந்ததாக இருந்தமைக்குச் சுகாதாரத்துறை அலுவலருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

15. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

16. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.

17. நூலக உறுப்பினர் படிவம்.

**விழுப்புரம் மாவட்டம், பெரியார் நகர், கபிலன் தெரு, 32 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் வளவனின் மகன் அமுதன் மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை அமுதனாக** எண்ணி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

18. **மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவம்.**

**15, காமராசர் நகர், பெரியார் தெரு, விருத்தாசலம் – 10** என்ற முகவரியில் வசிக்கும் **தமிழ்வேந்தன்** என்பவரின் மகள் **பூந்தளிர், அரசு உயர்நிலைப்பள்ளி, விருத்தாசலம், கடலூர்**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு முடித்திருக்கிறார்**. அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை பூந்தளிராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

19. **விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேருவதற்கான படிவம்.**

**10, நன்மணம் நகர், கண்ணதாசன் தெரு, திருவள்ளூர் மாவட்டம் – 10** என்ற பகுதியில் குடியிருக்கும் **இளமாறன்** மகன் **இனியன்** அப்பகுதியில் உள்ள **அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு** படித்துக்கொண்டிருக்கிறார். இனியன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை **இனியனாகக்** கருதி, கொடுக்கப்பட்ட **விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேருவதற்கான** சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

**20. பணி வாய்ப்பு வேண்டித் தன் விவரப் பட்டியலை விண்ணப்பப் படிவம்.**

**எண் – 15, பாரதிதாசன் நகர், கபிலர் தெரு, அரியலூர் மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் தமிழ்ச்செல்வி, கணினிப் பயிற்றுநர்** பணி வேண்டித் தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர் தன்னை செல்வியாகக் கருதிப் பணி வாய்ப்பு வேண்டித் தன் விவரப் பட்டியலை நிரப்புக.

21. **இன்சொல் வழி** நடப்பதால் உண்டாகும் நன்மைகள் எவையேனும் ஐந்தினையும் **தீய சொல்** பேசுவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்தினையும் பட்டியலிடுக.

(அல்லது) **இன்சொல் பேசும் சூழலையும் வன்சொல் பேசும் சூழலையும் பட்டியலிட்டு அவற்றில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது? என்பதைக் குறிப்பிட்டு விளக்குக.**

**22. வானொலி அறிவிப்பு**

**ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது...** மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

**23. தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி;**
**திறன்பேசியிலேயே விளையாடிக்கொண்டிருக்கும் தங்கை;**
**காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்;**
**எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி**

**இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள் !** இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

**24. பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்துகொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக.**

**25. நிகழ்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்புவனவற்றை வரிசைப்படுத்துக.**

26. **வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும்** நீங்கள் செய்ய வேண்டிய செயல்கள் ஐந்தினை எழுதுக.

27. **மாணவர் பருவத்தில் நீங்கள் செய்ய வேண்டிய அறங்களையும்** அதனால் ஏற்படும் நன்மைகளையும் எழுதுக?

28. **அன்றாட வாழ்வில் நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலையைப் பட்டியலிடுக.**

**29. மொழிபெயர்ப்புப் பகுதிகள்.**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# டி.இ.எல்.சி மேக்டலின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி
## புரசைவாக்கம், சென்னை – 600 007.

### பகுதி – V
### எட்டு மதிப்பெண் வினாக்கள்

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.
2. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவை போன்ற அன்றைய செயல்கள் குறித்தும் இக்காலத்தில் விருந்தோம்பல் குறித்தும் விவரித்து எழுதுக.
3. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
4. தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை – இந்தக் குறிப்புகளைக் கொண்டு ' செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.
5. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.
6. நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் –இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.
7. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.
8. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.
9. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
10. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.
11. 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.
12. அனுமார் ஆட்டம் குறித்து 'பாய்ச்சல்' கதை வழி விளக்குக .

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

**13. உங்கள் ஊரில் கடின உழைப்பாளர்–சிறப்புமிக்கவர்– போற்றத்தக்கவர்–என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து எழுதுக. குறிப்பு : பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர்...**

**14. இராமானுஜர் நாடகம் வழியாக வெளிப்படும் மனிதநேயம் சார்ந்த அறக்கருத்தை விவரித்து எழுதுக.**

15. 'அழகிரிசாமியின்' **ஒருவன் இருக்கிறான்** சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

16. **குமரிக் கடல்முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதிகூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.** இக்கருத்தைக் கருவாகக் கொண்டு **'சான்றோர் வளர்த்த தமிழ்'** என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

17. **குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.**

**<u>குறிப்புகள் :</u>** முன்னுரை– இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – காற்று மாசுபடுவதே சூழல் மாசடைவதற்கான காரணம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.

**18. கட்டுரை எழுதுக. தலைப்பு –'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' .**

19. பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை/ கட்டுரை /சிறுகதை /**கவிதை நூலுக்கான மதிப்புரை** எழுதுக.

**20. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்கு நீங்கள் சென்று வந்த நிகழ்வைக் குறித்துக் கட்டுரை எழுதுக.**



Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

12. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறா...

13. மன்னர் இடைக்காடனார்க்கு சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

14. சோலைக்காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

15. இன்றைய அறிவியல் அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

II. வினா எண் 38 - சிறுவினா - [ஐந்து மதிப்பெண்]

1. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

2. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக?

4. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக?

5. சிலப்பதிகார மருவூர்ப் பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக?

6. கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க?

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

வினா எண் 43 நெடுவினா

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

2. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அத்தனை தொல்லுமா.... .......... செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக?

3. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவை -யானவையே என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகள் தருக?

4. ஜெயகாந்தன் நினைவு சிறப்பிதழ் வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

5. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச்சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு

| வ.எண் | குறிப்புச் சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | புயலின் கோரம் |
| 3 | வருணனை, அடுக்குத்தொடர் |
| 4 | ஒலிக்குறிப்பு |
| 5 | தோணி படும்பாடு |
| 6 | கரை சேர்தல் |
| 7 | முடிவுரை |

தொங்கான் கப்பல் கம்பித்தான் மாலுமி

வர்ணனை

அலைகள் எண்ணெய் பூசியது போல் எலும்பு நொறுங்குவது போல மலைகள் போல அலைகள் வானம் உடைந்து வெள்ளம் கொட்டியது வானம் பிளந்து தீ கக்கியது



www.Padasalai.Net ilahi highschool YouTube Channel

Scanned with CamScanner

அடுக்குத்தொடர்

நொறு நொறு, நடுநடுங்கி, குதிகுதித்து, கிறுகிறுத்து, கரை கரை கரை. சூரியன் சூரியன் சூரியன், கரை கரை கரை.

ஒலிக்குறிப்பு

பொய்ங்புய்ங், பொய்ங்புய்ங், பொய்ங்புய்ங்

6. அண்ணமய்யா என்னும் பெயருக்கும் அவரது செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க ?

| வ.எண் | குறிப்புச்சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | மரத்தடியில் வாலிபன் |
| 4 | நீச்சத் தண்ணீர் |
| 5 | அண்ணமய்யா |
| 6 | சுப்பையா வயல் |
| 7 | முடிவுரை |

அண்ணமய்யா
சுப்பையா
பரமேஸ்வரன்
என்ற மணி

7. " அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண் வெளிப் பயணம் " என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்று எழுதுக ?

| வ.எண் | குறிப்புச்சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | அறிமுகம் செய்தல் |
| 4 | விண்மீன்கள் |
| 5 | கருந்துளை |
| 6 | கதிர்வீச்சும் துகளும் |
| 7 | திரும்புதல் |
| 8 | முடிவுரை |

www.Padasalai.Net ilahi high school YouTube Channel



Scanned with CamScanner

8. கற்கை நன்றே கற்கை நன்றே ..... அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

இந்தப்பட்டம் பெறும் மாணவர்கள் எழுதவும் படிக்கவும் கூடியவர்கள்

| வ.எண் | குறிப்புச்சட்டகம் குறிப்புகள் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | மேரியின் வருத்தம் |
| 3 | புதியின நம்பிக்கை |
| 4 | மேரியின் மேல்படிப்பு |
| 5 | முடிவுரை |

பெத்யூன் மிஸ்வில்சன்

9. அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் ..... எழுதுக.

அலுவலர் மனம் திருந்தி ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கினார்

வீரப்பன் கடிதமும் மூன்று ரூபாயும்

| வ.எண் | குறிப்புச் சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | குப்புசாமியின் குடும்பம் |
| 4 | வீரப்பன் என்னும் அருளாளர் |
| 5 | ஆறுமுகம் என்னும் கொடையாளர் |
| 6 | அலுவலர் என்னும் பண்பாளர் |
| 7 | முடிவுரை |

கட்டைத்தொட்டி ஆறுமுகம் சாத்துக்குடி ஒரு ரூபாய்

10. மகளிர் நாள் விழா நாள் : 08.3.2020

இடம் : பள்ளிக்கலையரங்கம்

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் - கலையரசியின் சிறப்புரை - நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

www.Padasalai.Net
ilahi highschool YouTube Channel



Scanned with CamScanner

## உரிபட்ட வினாக்கள்! 8 Marks / 5 Marks

1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. (8 Marks / 5 Marks).

2. சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு / ஐந்து அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக: (8 Marks / 5 Marks)

3. இலக்கிய நயம் பாராட்டுக! (காலக் கணிதம்) (or) (8 Marks)
'காலக்கணிதம்' கவிதையில் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துக்களை எழுதுக! (5 Marks)

4. காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் ஏதேனும் ஐந்தினை எழுதி உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக. (5 Marks)

5. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும், கலைஞர்களையும், அல்லல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக: (8 Marks)

6. உனக்குத் தெரிந்த ஏதேனும் ஐந்து நிகழ்கலை வடிவங்கள் குறித்து எழுதுக! (8 Marks) (or) 5 Marks.

7. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலைப் பற்றி விவரிக்க.

8. நாட்டு விழாக்கள் - விடுதலை போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்பு கொண்டு ஒரு பக்க அளவில் எழுதுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

13. கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது. மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன. காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் பண்டைத் தமிழரின் திணை நிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக. (3 Marks)

14. மாற்றுத்திறனாளிகளின் திறமைகளைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டுவிழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக. (5 Marks)

15. மங்கையராய்ப் பிறப்பதற்கே என்னும் பாடத்தில் இடம்பெற்றுள்ள மூவர் பற்றிச் சுருக்கி எழுதுக! (8 Marks) (August 2022)

16. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த இயல்புகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக - விளக்குக. (3 Marks)

17. உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக - (8 Marks)

18. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக. (3 Marks)

19. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும் (3 Marks)
கோலொடு நின்றான் இரவு — குறளில் பயின்று வரும் அணியை — விளக்குக.

20 (a) எப்பர் - குறிப்பு வரைக! (2 Marks) (b) சதாவதானம் குறிப்பு வரைக. (2 Marks)

21. மொழி பெயர்ப்பின் பயன்கள் எழுதுக; (3 Marks)

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

22. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை இதன் வழி விளக்குக. (5 Marks)

23.

ilahi high school YouTube Channel
www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

Prepared By

M.Abbas Manthiri B.sc,B.ed,M.A.M.phil

B.T.Assistant Science

Ilahi Oriental Arabic high school

Cumbum _ Theni dt

More Materials Search //

ilahi high school YouTube Channel

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

Scanned with CamScanner